<u>**O.S.No. 334/2007**</u>

<u>**DW 1: ராஜேஷ்கண்ணா**</u> தேதி 10.3.2026

<u>பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு தொடர்பான விவரங்கள் எனக்கு ஆவண ரீதியாக தெரியும். புவனேஷ்வரியின் மகள்கள் பிரபாதேவி மற்றும் திவ்யா 8 மற்றும் 9 பிரதிவாதிகள் அ வ எண் 628/1998 என்ற வழக்கை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது அந்த வழக்கில் எங்கள் வங்கி தரப்பினராக இல்லை. மேற்படி வழக்கின் தீர்ப்பாணையின் பேரில் **EP** 292/2001 என்ற மனுவை தாக்கல் செய்ததில் **REA** 41/2002 என்ற மனுவை எங்கள் வங்கி சார்பாக ஆட்சேபணை செய்தோம் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த கோப்பினை நான் பார்வையிடவில்லை. **REA** மனு தள்ளுபடி செய்ததின் பேரில் எங்கள் வங்கி மேல்முறையீடு செய்ததா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி **REA** மனுவின் பேரில் **AS** 111/12 என்று எங்கள் வங்கி மேல்முறையீடு செய்திருக்கிறது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. ராஜி தங்கம் டெக்ஸ்டைல்ஸ் எங்களிடம் எப்போது லோன் வாங்கினார்கள் என்றால் 1995 ல் இருக்கலாம். எங்களிடம் லோன் வாங்கிய சமயத்தில் ராஜி தங்கம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் பிரைவேட் லிமிடெட் ஆக இருந்தது. 1996 ல் **Joint stock** நிறுவனமாக மாற்றம் ஆனது என்றால் அது எனக்கு தெரியாது. **Private limited** நிறுவனத்தை **joint stock** நிறுவனமாக மாற்றம் செய்ய இயலாது. **AS** 111/12 ல் நாங்கள் எப்போதில் இருந்து சுவாதீனத்தை பெற்று கொண்டதாக சொல்லியிருக்கிறோம் என்றால் சாட்சி பிவாசாஆ 3 ஆவணத்தை படித்துவிட்டு 27.3.1998 ல் நிறுவனத்தில் உள்ள மெசினரிஸ், நிலம், கட்டிடம் ஆகியவற்றை எங்கள் வங்கி சுவாதீனம் எடுத்து கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் **REA** மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

முறைப்படி சர்பாசி ஆக்டின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. சர்பாசி ஆக்டின் கீழ் நாங்கள் நடவடிக்கை எடுத்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் அதை என்னால் தற்போது சொல்ல இயலாது. சர்பாசி ஆக்ட்டை முறைப்படி எடுக்காததால் இந்த வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ராஜி தங்கம் டெக்ஸ்டைல்ஸ் கோபாலகிருஷ்ணன் என்பவரை நிர்வாகம் செய்ததற்காக நியமனம் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். 27.3.1998 ல் எங்களிடம் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்ட பின்னிட்டு மேற்படி கட்டிடத்தில் உள்ள மெசினரீசை விற்பனை செய்து தொகையை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது. அதற்கான கணக்கு விவரங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். ராஜி தங்கம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் உள்ள மெசினரீசை விற்று இருந்திருந்தால் அந்த தொகையை எங்கள் வங்கி கணக்கிற்கு எடுத்து கொண்டு கடனை நீக்கியிருக்கலாம் என்றால் அது போதுமானதாக இல்லை. எங்கள் வங்கியும் சேர்மேன் கோபாலகிருஷ்ணனும் வஞ்ச கூட்டாக சேர்ந்து ராஜி தங்கம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தை சட்டத்திற்கு புறம்பாக எடுத்து கொண்டோம் என்றால் சரியல்ல.